# 'பெரியகடைவீதி' நளமகாராஜா ஸ்பெஷல்

## ரம்யாசில் களைகட்டுது உணவுத் திருவிழா

திருச்சி பெரிய கடைவீதிக்கு பகலில் மட்டுமின்றி இரவிலும் தனி மவுசு உண்டு. காரணம் காந்திமார்க்கெட் வளைவு முதல் மலைக்கோட்டை வாசல் வரையிலான பெரியகடைவீதி முழுவதும் இருக்கும் சாலையோர இரவு நேர நளமகாராஜாக்களின் டிபன்கடைகள். வெண்பொங்கல், சூடான இலவம்பஞ்சு இட்லியில் தொடங்கி டிபன் வகைகள் உட்பட ருசியான பிரியாணி வரை அத்தனையும் இந்த பஜாரில் ருசிக்கலாம். இதனாலேயே பெரியகடைவீதி டிபன் கடைகளுக்கு ஏழைகள் முதல் பணக்காரர்கள் வரை தமிழக அளவில் வாடிக்கையாளர்கள் உண்டு. இரவு நேர கடைகளாக இருந்தாலும் குடும்பத்தோடு காரில் அமர்ந்தே சாப்பிடுபவர்களும் உண்டு. இந்த இரவு நேர நளமகாராஜாக்கள் கொடுக்கும் அதே 'சுவை'தர பெரியகடைவீதி 'உணவுத்திருவிழா' ஒன்றை நடத்தி வருகிறது ரம்யாஸ் ஓட்டல்.

ஓட்டலின் மேல் மாடியில் உள்ள திறந்த வெளியில் தினமும் இரவு 7.30 மணி முதல் 11 மணி வரை நடைபெறும் பெரியகடைவீதி உணவு திருவிழாவில் சைவம் மற்றும் அசைவம் என்று சாப்பிடுவோரை சுண்டி இழுக்கும் வகையில் ஏராளமான உணவு வகைகள் கிடைக்கிறது.



**நளமகாராஜா ஸ்பெஷல்:** உணவுத்திருவிழாவில் சுவைத்து மகிழ காத்திருக்கும் வாடிக்கையாளர்கள்.

இதுகுறித்து ரம்யாஸ் ஓட்டல் தலைமை சமையல்கலைஞர் ராஜேந்திரன் கூறுகையில், "திருச்சியில் இரவு நேர சாலையோர டிபன் கடைகளுக்கு பெயர் பெற்ற பெரியகடைவீதிக்குச் சென்று சாப்பிட முடியாதவர்களுக்கு அதே சுவையில் உணவுப் பண்டங்களை வழங்குவதற்காக இந்த உணவுத்திருவிழா நடத்தப்படுகிறது.

இதில், இரவு நேரத்திற்கு ஏற்ற வகையில் இட்லி, தோசை, நெய்தோசை, ஊத்தப்பம், ஆப்பம், இடியாப்பம், பணியாரம், கொழுக்கட்டை, புரோட்டா, கொத்து புரோட்டா, வீச்சு புரோட்டா, முட்டை லாப்பா ஆகியவை கிடைக்கும். விருதுநகர் சுருள் புரோட்டா, கறிதோசை என்று ஸ்பெஷல் வகைகளும் உண்டு.

இவற்றிற்கு ஏற்ற வகையில் மட்டன், சிக்கன் சுக்கா, சாப்ஸ், கோலா, குழம்பு, லிவர் ப்ரை, குடல் வறுவல் போன்றவையும், நெத்திலி, விரால், கிழங்கா மீன் குழம்பு மற்றும் ப்ரை, ஈரல், நண்டு போன்றவையும் வழங்கப்படுகிறது.

மேலும் பிரியாணி, சிக்கன் ப்ரைடு ரைஸ், நூடுல்ஸ், சூப் வகைகள் போன்றவையும் கிடைக்கும். சைவ பிரியர்களுக்காக பன்னீர், காய்கறி, காலிபிளவர் உள்ளிட்ட சைவ மசாலா வகைகளும் என்று 50க்கும் மேற்பட்ட சைவ , அசைவ உணவு வகைகளை இங்கு வந்தால் சுவைக்கலாம்.

செட்டிநாடு சுவையில் கொஞ்சமும் குறைவு வரக்கூடாது என்பதற்காக புதுக்கோட்டை மற்றும் காரைக்குடியில் இருந்து சமையல் கலைஞர்களை வரவழைத்து, அம்மி, ஆட்டுக்கல்லில் அரைக்கப்பட்ட மசாலா வகைகளை கொண்டு உடனுக்குடன் நேரடியாக சமைத்து தருகிறோம். அதோடு பெரியகடைவீதி போன்றே இருக்க வேண்டும் என்பதற்காக இங்கு பணியாற்றும் சமையலர்கள், சர்வர்கள் ஆகியோருக்கு கைலி, வேஷ்டி, பனியன், துண்டு போன்ற உடைகள் வழங்கியுள்ளோம்.

இந்த உணவுத்திருவிழாவில் பொதுமக்கள் குடும்பமாகவும், நண்பர்கள் இணைந்தும் வந்து உண்டு மகிழ்கின்றனர். எங்கள் முயற்சிக்கு நல்ல வரவேற்பு கிடைத்துள்ளது'', என்றார்.

**என்னங்க, நாக்கு ஊறுகிறதா?**